Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"The unified voice of Canadian Tamils"

www.canadiantamilcingress.ca
info@canadiantamilcongress.ca

**Head Quarters:**
**Toronto**
202-31 Progress Ave.
Toronto, On. M1P 4S6
Canada

Tel: **416 240 0078**
Fax: 416 240 1601

**Chapters:**
- **Ottawa** 613 789 9371
- **Montreal** 514 898 8019
- **Vancouver** 778 231 0074
- **Edmonton** 780 660 1211
- **Winnipeg** 204 219 2018
- **Halifax** 902 229 5482

# வட அமெரிக்க தமிழர் தீர்மானம்

**ஐக்கிய அமெரிக்கா, கனடா உட்பட்ட வட அமெரிக்க தமிழராகிய நாம்:**

1. வன்னியில் நிகழ்ந்த மனிதப் பேரழிவாலும், படுகொலையாலும், அவற்றிலிருந்து தமிழ் மக்களை சர்வதேச சமூகம் பாதுகாக்கத் தவறியதாலும் ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைந்துள்ளோம்.

2. இலங்கை அரசு, ஜெனீவா உடன்படிக்கைக்கு மாறாக, 2009 தை மாதம் தொட்டு 30,000-க்கும் மேற்பட்ட தமிழ் மக்களைத் திட்டமிட்டுக் கொன்று, தமிழினப் படுகொலை புரிந்ததையிட்டு வேதனை அடைந்துள்ளோம். ஆயிரக் கணக்கில் மக்கள் காணாமல் போவதையிட்டு ஏக்கமடைந்துள்ளோம்.

3. ஐ.நா.செய்மதிப் படிம ஆய்வு, (பாதுகாப்பு வலயம் எனப்பட்ட) போர் வலயத்திலிருந்து வெளிப்பட்ட ஆட்களின் சாட்சியம், ஒளிப்படங்கள், காணொலி நறுக்குகள் என்பன சான்றுபகர்வது போன்று, வன்னியைக் கைப்பற்றுவதற்கான போரில் இலங்கை அரசு போர்க் குற்றங்களையும், மானுடத்துக்கு எதிரான குற்றங்களையும் புரிந்ததையிட்டு வேதனை அடைந்துள்ளோம்.

4. சர்வதேச சமூகமும், ஐ.நா.வும் தமிழ் மக்களை இம்மியும் பாதுகாக்கத் தவறியதையிட்டு ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

5. இலங்கை அரசாங்கத்தின் கொடுமைக்கு உள்ளாகும் அச்சத்துடன், சட்டபூர்வமான பரிகாரம் நாடுவதற்குப் போதிய வாய்ப்பின்றி, சிறை முகாங்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள், மற்றும் யாழ் குடாநாட்டிலும், கீழ் மாகாணத்திலும், இலங்கையின் பிற பகுதிகளிலும்

திறந்தவெளிச் சிறைகளில் இடப்பட்டுள்ள தமிழ் மக்கள் அனைவரதும்